1994 மே 3]

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 4-12-1993 அன்று அடித்த புயலின்போது எங்களுடைய நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் 7,800 புளிய மரங்கள் விழுந்து விட்டதாக உதவி இயக்குநர், தோட்டக்கலை அவர்கள் அரசுக்குத் தகவல் அனுப்பி இருக்கிறார்கள். இது ஒரு உண்மையான கணக்கு. இந்த மரங்களுக்கு பதிலாக குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய புளிய மரங்களை அங்கே நடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியங் கன்றுகள் அதிக விளைச்சல் தரக் கூடியவை. இந்தப் புளிய மரங்கள் மூன்றரை ஆண்டுகளில் காய்ப்புக்கு வரக் கூடிய தன்மை கொண்டவையாகும். அந்த ரக புளியங் கன்றுகளை இந்த ஆண்டு 35 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள். நிதியும் தந்திருக்கிறார்கள். எனவே அந்தக் கன்றுகளை அந்தப் பகுதியில் நடுவதற்கு விவசாயிகள் முன் வந்தால் அவர்களுக்குத் தரப்படும். அதைப் போல சாலையோரங்களில் நடுவதற்கும் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 492, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

492—

அயல் நாட்டில் வாழும் இந்தியரின் நிதி உதவி மூலம் தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் துவங்குதல்.

*11897— திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய தொழில் தொடங்குவோர், வெளிநாட்டில் வாழும் இந்தியரின் நிதியைப் (NRI) பெற, அரசு தனிப் பிரிவு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் என்ற ஓர் அமைப்பு மாநில அரசால் 1992ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தங்களது நிதியை தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்குத் தேவையான தகவல்களையும், அறிவுரைகளையும் வழங்கி வழிகாட்டி வருகிறது.

[1994 மே 3

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் வாழ்கிற இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் தங்களுடைய வருவாயை தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்கு மூலதனமாக முதலீடு செய்வதற்கு முன்வருகிற நிலையில் என். ஆர். ஐ. நிதியை தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு என்றே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, அதன்வாயிலாக என். ஆர். ஐ நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்து புதிய தொழில்கள் தொடங்கப்படுகிற வகையில் ஏதாவது ஆய்வு நடத்தப்பட்டிருக் கிறதா? எத்தனை தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் வாழ்கிற என். ஆர். ஐ மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேவையான தொழில் களைத் தொடங்குவதற்கு தேவையான தகவல்களை தமிழ்நாட்டு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் வழங்கி தேவையான உதவிகளைச் செய்து வருகிறது. அவர்கள் இங்கே முதலீடு செய்கிற வகையில் கடந்த தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக கூட்டுத் துறையில் ஒரு பரஸ்பர நிதியை அதாவது 'மியூச்சுவல் ஃபண்ட்' ஒன்றை அமைக்க அரசு திட்ட மிட்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டிட்கோ இதன் மூலமாக நம் நாட்டில் மற்றும் வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று தமிழநாட்டில் புதிய தொழில் திட்டங்களில் முதலீடு செய்யும். இதன்மூலம் தமிழ் நாட்டில் மேலும் தொழில் வளர்ச்சி ஏற்படும். வெளிநாட்டில் வாழ்கிற என். ஆர். ஐ. மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இதனைப் பயன்படுத்தி இங்கே தொழில் துவங்க வாய்ப்பிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் இதுவரை எத்தனை தொழில்கள் தொடங்குவதற்கு இதுமாதிரி யான மாநில அரசினுடைய தொழில் பிரிவுகளுக்கு விண்ணப்பித்து உள்ளார்கள். எவ்வளவு தொழில்கள் தொடங்குவதற்கு ஆய்வு கள் நடைபெறுகின்றன, எவ்வளவு நிதியில் அவர்கள் தொழில் துவங்க உள்ளார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி புதிய தொழில் தொடங்குவோர் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் நிதியைப் பெற அரசு தனிப் பிரிவு ஏற்படுத்துமா என்பது பற்றியதாகும். அவர் இப்போது கேட்டிருக்கிற கேள்விக்கு தனிக் கேள்வி போட்டால் விரிவாக விளக்கமாக பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. பாலசுப்பிரமணியன்

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்கப்பட்ட இந்த கேள்வி என்.ஆர்.ஐ. அதாவது வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுடைய நிதியைப் பெற அரசு தனிப் பிரிவு ஏற்படுத்துமா என்று கேட்கப்பட்டதாகும். ஆனால் இந்தக் கேள்விக்கு முன்பே மாண்புமிகு நமது தமிழக முதலவர் அவர்கள் ஏற்கனவே ஏற்படுத்திய மாஸ்டர் பிளான் என்ற வகையிலே இதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழகம் வளரவேண்டும் என்ற எண்ணத்திலே அதை ஆரம்பித்து இருக்கிறார்கள். இப்படி என்.ஆர்.ஐ. யிலிருந்து நிதி அரசுக்கு வரும்போது, தனியார்கள் தொழில் தொடங்குகின்ற காலத்திலே பேங்குகள் எல்லாம் சில ரெஸ்ட்ரிக்சன்களை ஏற்படுத்துகின்றன. அந்த ரெஸ்ட்ரிக்சன்களை அவர்கள் நிவர்த்தி செய்தால்தான் மேற்படி என்.ஆர்.ஐ. பணத்தை உபயோகித்து தனியார்கள் தொழில் நல்ல வகையிலே நடத்திட முடியும் என்பதை ஆதாரமாகக் கொண்டு அந்த என்.ஆர்.ஐ. பணத்தை கொண்டு வருவதற்கு நம்முடைய தொழில்துறை அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று அனேகமாக பல பேர்களைச் சந்தித்து அவர்கள் எல்லோரும் தமிழகத்திற்கு தொழில் தொடங்க வருவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னதற்கு அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போல் அந்நிய நாடுகளிலிருந்து வரக்கூடிய பணத்தை ஒரு 'பூலிங் சிஸ்டம்' ஏற்படுத்தி அதில் யார் யார் வருகிறார்களோ அவர்களை எல்லாம் மெம்பர்களாகச் சேர்த்து தனியார் தொழில் துவங்கும் வகையிலே அந்தப் பணத்தைப் பயன்படுத்தி அந்தந்தத் தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்கும் வகையிலே அந்தப் பணத்தைப் பயன் படுத்தி நடத்தித் தருவதற்கு வழிவகுக்குமா என்று அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் பெறுவதற்காக சென்னையிலிருந்து பட்டுகோட்டை வரை போயிருக்கிறார்கள். நான் ஏற்கனவே தெளிவாக பதில் சொல்லி இருக்கிறேன். வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் அயல் நாட்டு தொழில் முனைவர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இங்கிருக்கும் சில வங்கிகள் எல்லாம் சில சிக்கல்களை ஏற்படுத்துவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் தவிர்க்கும் பொருட்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில் ஒரு பரஸ்பர நிதி நிறுவனம் அதாவது மியூசுவல் பண்ட் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியர்கள் மற்றும் அயல் நாட்டு தொழில் முனைவர்கள் அதனைப் பயன்படுத்தி இங்கே தொழில் தொடங்கு

வதற்கும் இங்கே நிதியைப் போடுவதற்கான வாய்ப்பும் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்ட குறைகள் எல்லாம் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வி தான். நீங்கள் மூலக் கேள்வி போடவில்லை. பட்டுக்கோட்டை வரை போவதற்கு பதில் பக்கத்திலே இருக்கிற அடையாறிலே நீங்கள் கேட்டு விவரங்களைத் தெரிந்துகொண்டு வந்திருக்கலாம். திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ளவர்கள் தொழில் துவங்க, வெளிநாட்டில் வாழும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் முதலீடு செய்து என்.ஆர்.ஐ. வங்கிக் கணக்கின் மூலம் வெளிநாட்டுப் பணத்தைப்பெற்று இங்குள்ளவர்கள் பெயரிலேயே தொழில் துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே உறுப்பினர் செல்வராஜ் அவர்களுக்கும், பட்டுக்கோட்டை பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் சொன்ன பதிலை நம்முடைய சுந்தரவேல் அவர்களின் கேள்விக்கும் பதிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியர்கள் மற்றும் தொழில் தொடங்குவோர் இங்கே தொழில் தொடங்க வேண்டுமென்று சொன்னால் நேரடியாக அவர்கள் இங்கே வந்து தொழில் தொடங்கலாம். அவர்களின் நிதியை இங்கே போட வேண்டுமென்று சொன்னாலோ அல்லது அந்த நிதியிலிருந்து வேறு தொழில்களுக்கு அதைப் பயன்படுத்தவேண்டுமென்று சொன்னாலோ அதற்காகத்தான் தொழில் வளர்ச்சி நிறுவனம் அதாவது 'டிட்கோ' மூலம் மியூசுவல் பண்டு என்கிற ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். அவர்கள் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 493, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

493—

பூம்புகார் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்.

*16871—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?